DAILY THANTHI

Dated: 16.04.2025

### தேர்தல் பிரமாண விவகாரம்:

# முன்னாள் எம்.பி. ரவீந்திரநாத்துக்கு எதிரான வழக்கில் தமிழ்நாடு அரசுக்கு நோட்டீஸ்

## சுப்ரீம் கோர்ட்டு உத்தரவு

புதுடெல்லி, ஏப்.16-

தேர்தல் பிரமாண பத்திரத்தில் தகவல்களை மறைத்ததாக முன்னாள் முதல்-அமைச்சர் ஓ.பன்னீர்செல்வத்தின் மகனும், தேனி முன்னாள் எம்.பி.யுமான ரவீந்திரநாத்துக்கு எதிரான வழக்கை ஐகோர்ட்டு மதுரை கிளை ரத்துசெய்தது. இதை எதிர்த்து மிலானி என்பவர் சார்பில் வக்கீல் ஏ.வேலன் சுப்ரீம் கோர்ட்டில் மேல் முறையீடு செய்தார். இந்த மனுவை நீதிபதிகள் தீபாங்கர் தத்தா, மன்மோகன் சிங் அடங்கிய அமர்வு விசாரித்தது. அப்போது இந்த மனுவுக்கு பதில் அளிக்குமாறு தமிழ்நாடு அரசுக்கும், ரவீந்திரநாத்துக்கும் நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டனர்.

DINAMALAR
Dated: 16.04.2025

# பன்னீர்செல்வம் மகனுக்கு உச்ச நீதிமன்றம் நோட்டீஸ்

**- புதுடில்லி சிறப்பு நிருபர் -**

தமிழக முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வத்தின் மகன் ஓ.பி.ரவீந்திரநாத், 2019ல் அ.தி.மு.க., சார்பில் தேனி லோக்சபா தொகுதியில் போட்டியிட்டார்.

'ரவீந்திரநாத், தன் வேட்பு மனுவில் சொத்து விபரங்கள், கல்வி தகுதி உள்ளிட்டவற்றை மறைத்து, தவறான தகவல்களை தெரிவித்திருக்கிறார்.



அதனால், அவர் மீது குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என வலியுறுத்தி, மிலானி என்பவர், தேனி நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார்.

வழக்கை விசாரித்த சிறப்பு நீதிமன்றம், ரவீந்திரநாத் மீது வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி, அறிக்கை தாக்கல் செய்யும்படி, தேனி போலீசாருக்கு உத்தரவிட்டது.

இந்த வழக்கை ரத்து செய்யக்கோரி, ரவீந்திரநாத் சார்பில் தாக்கல் செய்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம், தேனி நீதிமன்ற விசாரணைக்கு தடை விதித்து உத்தரவிட்டது. இதற்கு எதிராக, மனுதாரர் மிலானி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருந்தார்.

இந்த மனு, நீதிபதிகள் திபங்கர் தத்தா மற்றும் மன்மோகன் ஆகியோர் அமர்வில், நேற்று விசாரணைக்கு வந்தது.

அப்போது, 'இந்த விவகாரத்தில் எதிர் மனுதாரர் ரவீந்திரநாத் மற்றும் தமிழக போலீசார் பதில் அளிக்க வேண்டும்' என நோட்டீஸ் பிறப்பித்த நீதிபதிகள், விசாரணையை நான்கு வாரத்திற்கு ஒத்திவைத்தனர்.

DINA KARAN

Dated: 16.04.2025

### வேட்பு மனுவில் சொத்து தகவல் மறைப்பு

# ஓ.பி.ரவீந்திரநாத்துக்கு நோட்டீஸ்

**உச்ச நீதிமன்றம் அதிரடி**



புதுடெல்லி, ஏப்.16: கடந்த 2019ம் ஆண்டு நடைபெற்ற மக்களவைத் தேர்தலில் தேனி தொகுதியில் போட்டியிட்ட ஓ.பன்னீர் செல்வத்தின் மகன் ஓ.பி ரவீந்திரநாத்குமார் தனது வேட்பு மனுவில் சொத்து விவரங்கள், கல்வித் தகுதிகள் உள்ளிட்ட விவரங்களை மறைத்து தவறான தகவல்களை தேர்தல் அதிகாரிகளிடம் வழங்கியதாகவும், எனவே இவர் மீது மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் படி குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி மிலானி என்பவர் தேனியில் உள்ள சிறப்பு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். உச்ச நீதிமன்றத்தில் நீதிபதிகள் திபங்கர் தத்தா மற்றும் மன்மோகன் ஆகியோர் அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தபோது பிறப்பித்த உத்தரவில், இந்த விவகாரத்தில் எதிர்மனுதாரர் ஓ.பி.ரவீந்திரநாத் மற்றும் தமிழ்நாடு காவல்துறை ஆகியோர் நான்கு வாரத்தில் பதிலளிக்க வேண்டும் என்று நோட்டீஸ் பிறப்பித்து வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தனர்.